**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 1226/2004**

**Date :26.03.2026**

**வா.சா. 1 -ரால்ப் கிராண்ட் மதன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் வாவத்துறை என்றால் சரிதான். மேற்படி வாவத்துறை ஊர் நாகர்கோவிலிருந்து 15 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த தேதியில் இருந்து கார்மெல் நகர் திருக்குடும்ப ஆலயம் சர்ச்சில் அருள்பணியாளராக இருக்கிறேன் என்றால் 2025 மே மாதம் முதல். இதற்கு முன்பாக எங்கு பணிபுரிந்து வந்தேன் என்றால் ஆரோக்யபுரம் ரோமன் கத்தோலிக்க சர்ச்சில் பணிபுரிந்து வந்தேன். எனக்கு 2025 ம் ஆண்டிற்கு முன்பாக மேற்படி கார்மெல் நகர் திருக்குடும்ப ஆலயம் சர்ச்சில் நடந்த விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கோப்புகளின் அடிப்படையில் தெரியும். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விவரங்கள் குறித் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

வழக்கின் பிரதிவாதிகளை நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கின் 2 ம் பிரதிவாதி ஞானமணி காலம் சென்று விட்டார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் நாங்கள் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி கிறிஸ்துதாஸ் என்பவரை நான் பார்த்தது கிடையாது மற்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி தற்போது எங்கள் ஆலயத்தில் உறுப்பினர் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி குறித்த உயிருடன் உள்ளாரா மற்றும் எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி குறித்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் பார்த்துள்ளேன் மற்றபடி தெரியாது., 1ம் பிரதிவாதி ஒரு வயதான முதியவர் அவர் தற்போது ஆலயத்தின் எந்த பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். வழக்கின் 1ம் வாதி பிஷப் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் வழக்கு ஆவணங்களை பார்த்த பின்பு தான் தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதி கோட்டார் ரோமன் கத்தோலிக் டயோசிஸ்சிற்கு பிரதிநிதி என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் வாதி கோட்டார் ரோமன் கத்தோலிக் டயாசிஸ்சிற்கு பிரதிநிதி என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றால் சரியல்ல.

கோட்டார் ரோமன் கத்தோலிக் டயோசிஸ்சிற்கு கீழ் மொத்தம் எத்தனை ஆலயம் உள்ளது என்றால் 95 பங்கு ஆலயங்கள் 35 கிளை ஆலயங்கள். ஒவ்வொரு ஆலயங்களிலும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். கோட்டார் கத்தோலிக் டயோசிஸ்சின் உறுப்பினர்களிடமிருந்து 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு அனுமதி பெறவில்லை என்றால் தேவையில்லை. இவ்வழக்கின் 2ம் வாதி பாதர் ஜேசுமரியான் என்றால் சரிதான். மேற்படி 2ம் வாதி தற்போதும் ரோமன் கத்தோலிக் திருச்சபையில் பங்கு பணியாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். குழித்துறை ரோமன் கத்தோலிக் திருச்சபையில் பங்கு பணியாளராக இருந்து வருகிறார் .

இவ்வழக்கின் 2ம் வாதியும் கார்மெல் நகர் திருக்குடும்ப ஆலயத்தின் பிரதிநிதி என்று கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2ம் வாதியும் கோட்டார் கத்தோலிக் டயோசிஸ்சின் உறுப்பினர்களிடமிருந்து 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு அனுமதி பெறவில்லை என்றால் தேவையில்லை. நீதிமன்றத்தில் இருந்து அனுமதி பெறாமலும் உறுப்பினர்களிடமிருந்து அனுமதி பெறாமலும் அவர்களுக்கு விவரம்

தெரிவிக்காமலும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கு 1ம் வாதி லியோன் தர்மராஜ் ஓய்வு பெற்ற பின்பு பீட்டர் ரெமிஜியஸ் என்பவரும் அதற்கு பின் நசெரின் சூசை என்பவரும் வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 2ம் வாதி ஜேசுமரியான் என்பவருக்கு பின்பு மரியசுசை வின்சன்ட் என்பவரும் பின்பு பேட்ரிக் சேவியர் என்பவரும் வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

நான் இவ்வழக்கின் மேற்படி நபர்களை யாரின் ஆலோசனை பெயரில் சாட்சி அளிக்கிறேன் என்றால் தற்போதுள்ள ஆயர் நசெரின் சூசை என்பவரின் ஆலோசனையில் . நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் ஆயர் நசெரின் சூசை என்பவரின் ஆலோசனையில் சாட்சி அளிக்கிறேன் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னை கார்மெல் நகர் திருக்குடும்ப ஆலயத்தின் பங்கு பணியாளராக நியமித்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்யலாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**